**வேலூர் மாவட்ட கூடுதல் முதன்மை கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**

**முன்னிலை : திருமதி. எஸ். மணிமொழி, எம்.ஏ., எம்.எட்., எம்.பில்.,**

**ந.க.எண்.1797/DC5/கலை/ஒபக/2023, நாள்**: 07.11.2023

பொருள் : ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி வேலூர் மாவட்டம் – கல்வி சாரா செயல்பாடுகள் – அரசு நிதியுதவி பெறும் நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் "கலைத் திருவிழா போட்டிகள் 2023-24" நடத்துதல் வழிகாட்டும் நெறிமுறைகள் வழங்குதல் – சார்பு.

பார்வை : தமிழ்நாடு ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநில திட்ட இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை-600006, ந.க.எண்:3856/ஆ3/கலை/ஒபக/2023, நாள்:02.11.2023.

------

பார்வையின் காண் கடிதத்தின்படி, கடந்த ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடரில் பள்ளிக் கல்வித்துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட அறிவிப்பினை அறிவித்துள்ளார்.

"மாணவர்களின் கலைத் திறன்களை வெளிக்கொணரும் விதமாக அரசுப் பள்ளிகளில் பயிலும் இலட்சக்கணக்கான மாணவர்கள் பயன்பெறும் வகையில் பள்ளி, வட்டாரம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் கலைத் திருவிழா நடத்தப்படும்".

இதனை தொடர்ந்து 2022-2023 ம் ஆண்டில் 6-12 வகுப்பு அரசு பள்ளி மாணவர்களுக்கு கலைத் திருவிழா போட்டிகள் நடத்தப்பட்டு. இப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளும் கலையரசன், கலையரசி விருதுகளும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது. பள்ளி, வட்டார மற்றும் மாவட்ட அளவில் பல லட்சம் மாணவர்கள் பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டனர். மாணவர்களின் கலைத் திறன்களை வெளிகொணரும் விதமாகவும், பள்ளிக் கல்வி செயல்பாடுகளின் ஒரு பகுதியாக 6 முதல் 9 வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு கலை சார்ந்த பயிற்சிகளும் கலை அரங்கம் செயல்பாடுகள் மூலம் அரசு பள்ளிகளில் வழங்கப்பட்டு வருகிறது.

**பள்ளிக் கல்வியில் கலை மற்றும் பண்பாட்டை ஒருங்கிணைத்தல்:**

கலைச் செயல்பாடுகள், குழந்தைகளின் உள்ளார்ந்த திறமைகளை வெளிகொணரக்கூடிய சூழலை உருவாக்குவதோடு, பிற கற்றல் செயல்பாடுகளில் மிகவும் சுறுசுறுப்புடனும் ஆழமாகவும் ஈடுபட உதவுகிறது. இவை குழந்தைகளின் முடிவெடுக்கும் திறனை மேம்படுத்தவதோடு மட்டுமல்லாமல் அவர்களை தன்னம்பிக்கை கொண்டவர்களாக மாற்றுகிறது. மேலும் அவர்களுக்கு பிடித்த கலையை கற்றுக் கொள்வதால், அவர்களைச் சுற்றியுள்ள உலகத்தைப் பற்றிய ஆழமான புரிதலை ஏற்படுத்துகிறது. இதனை முன்னிருத்தி இவ்வாண்டும் 6 முதல் 12 வகுப்பு மாணவர்கள் பங்கேற்கும் கலைத் திருவிழா போட்டிகள் அனைத்து அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பள்ளி, வட்டாரம், மாவட்ட அளவில் நடைப்பெற்றது 21.11.2023 முதல் 24.11.2023 வரை மாநில அளவிலான நடைப்பெறவுள்ளது.

இந்நிலையில் கல்வியாளர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள்-ஆசிரியர் சங்கங்கள் ஆகியோரின் கோரிக்கையின் அடிப்படையில் மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தற்போது அரசு நிதி உதவிப்பெறும் நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் இவ்வாண்டு 2023-24ல் கலைத் திருவிழா போட்டிகள் தனியாக நடத்திட திட்டமிடப்பட்டு இதற்கென விரிவான வழிகாட்டுதல்கள் பின்வருமாறு பார்வையில் கண்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அ. கலைத் திருவிழா போட்டிகள் – 2023-24:**

அனைத்து அரசு நிதியுதவிப் பெறும் நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 6 முதல் 12 வகுப்பு மாணவர்களுக்கு பின்வரும் அட்டவணையின்படி கலைத்திருவிழா போட்டிகள் நடத்தப்பட வேண்டும்.

| வ.எண் | நிலை | கால அளவு |
|---|---|---|
| 1 | மாவட்ட அளவில் | 14.11.2023, 15.11.2023, 16.11.2023, 17.11.2023 |
| 2 | மாநில அளவில் | 22.11.2023, 23.11.2023, 24.11.2023, 25.11.2023 |

முன்னதாக அனைத்து பள்ளிகளிலும் இணைப்பில் உள்ள போட்டிகளில் (தனி/குழு) ஆர்வமுள்ள மற்றும் சிறந்த ஒரு மாணவர் / ஒரு குழுவை கண்டறிந்து மாவட்ட அளவில் பங்குபெற செய்ய EMIS போர்டலில் பதிவேற்றம் செய்திட வேண்டும்.

**ஆ. போட்டிகள் மற்றும் பிரிவுகள் (category)**

கலைத் திருவிழா போட்டிகள் பின்வருமாறு மூன்று பிரிவுகளில் நடத்தப்படுதல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரிவு 1 - 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை

பிரிவு 2 - 9 மற்றும் 10 ஆம் வகுப்பு

பிரிவு 3 - 11 மற்றும் 12 ஆம் வகுப்பு

இம்மூன்று பிரிவில் நடைபெறும் போட்டிகள் மாவட்டம் மற்றும் மாநில அளவில் நடைபெறும். மாவட்ட அளவில் நடைபெறும் போட்டிகளில் முதல் தகுதி பெறும் மாணவர்கள் மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்க செய்தல் வேண்டும்.

**இ. பரிசுகள் மற்றும் விருதுகள் 2023-24:**

மாநில அளவில் போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும். மேலும் கலைத் திருவிழா தனி போட்டிகளில் கலந்து கொண்ட மாணவ / மாணவிகளில் அதிக போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்ற மாணவருக்கு கலையரசன் விருதும், மாணவிக்கு கலையரசி விருதும் வழங்கப்படும். இவ்விருதுகள் மூன்று பிரிவுகளிலும் தனித்தனியே வழங்கப்பட்டு மாணவர்களின் கலைத்திறன்கள் ஊக்கப்படுத்தப்படும். மாநில அளவில் வெற்றி பெறும் மாணவர்களில் தரவரிசையில் முதன்மை பெறும் 6 மாணவர்கள் வெளிநாடுகளுக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஈ.இவ்வாண்டு அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில், கலைத்திருவிழா போட்டிகள் நடத்துதல் சார்ந்த விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.**

**உ. போட்டியாளர்கள் மற்றும் வெற்றியாளர்களை EMIS-ல் பதிவு செய்தல்:**

பள்ளி அளவில் கண்டறியப்பட்ட ஆர்வமுள்ள மற்றும் சிறந்த மாணவர்களின் பெயரை EMIS ல் பதிவு செய்தல் வேண்டும். இந்த மாணவரின் பெயர் அடுத்த நிலையான மாவட்ட அளவில் பார்வையிட இயலும். இவ்வாறே மாவட்ட அளவில் போட்டிகள் நடத்தப்பட்டு போட்டி வாரியாக தேர்வான மாணவ / மாணவியரின் பெயரும் முதன்மைக் கல்வி அலுவலரின் EMIS Login வழியாக உள்ளீடு செய்யப்பட வேண்டும். இந்த மாணவரின் பெயர்களே மாநில அளவிலான போட்டிக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

| வ.எண் | நிலை | பொறுப்பாளர் | EMIS-ல் பதிவேற்றம் செய்வதற்கான கால அளவு |
|---|---|---|---|
| 1 | பள்ளி அளவில் | கணினி விவரமறிந்த சார்ந்த பள்ளி ஆசிரியர் | போட்டி வாரியாக மாணவர்கள் விவரங்கள் பதிவேற்றம் செய்தல் 13.11.2023 க்குள் |
| 2 | மாவட்ட அளவில் | I. மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள்-Art & Culture, EMIS<br>II. வகைபடுத்துநர் Programmer | 20.11.2023க்குள் |
| 3 | மாநில அளவில் | I. மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள்-Art & | 29.11.2023க்குள் |

| | | | |
|---|---|---|---|
| | | Culture, EMIS<br>II. வகைபடுத்துநர் Programmer | |

**குறிப்பு:** பள்ளி அளவில் தெரிவு செய்யப்படும் மாணவர்கள் விவரங்களை EMIS-ல் பதிவேற்றம் செய்த பின்னர், மாவட்ட மற்றும் மாநில அளவிலான போட்டிகள் நிகழும் போது பிழைகள் இருப்பின் திருத்திக் கொள்வது கடினம். எனவே, மாணவர்கள் விவரங்களை பிழையின்றி EMIS-ல் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

**எ. Success Stories**

கலைத் திருவிழா போட்டிகள் மாணவர்களிடையே ஏற்படுத்தும் தாக்கத்தினை ஒவ்வொரு பள்ளிகளிலிருந்தும் பெற்று ஆவணப்படுத்தி வட்டார அளவில் தொகுத்து மாவட்ட திட்ட அலுவலகத்தில் சமர்பிக்க வேண்டுமென தெரிவிக்கப்படுகிறது.

எனவே, அனைத்து வகை அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளிலும் கலைத் திருவிழா போட்டிகளில் பெருமளவு மாணவர்களின் பங்கேற்பினை உறுதி செய்ய வேண்டுமாய் அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது. இதனை ஆய்வு அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

**இணைப்பு:**

1. தமிழ்நாடு ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநில திட்ட இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை-6.
2. கலைத்திருவிழா போட்டிகள் நடத்துவதற்கான வழிகாட்டும் நெறிமுறைகள்.

**ஒப்பம்**

**கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்**

**ஒருங்கிணைந்த பள்ளி கல்வி**

**வேலூர் மாவட்டம்.**

**பெறுதல் :**

1. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை), வேலூர் மாவட்டம். (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)
2. மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி), வேலூர் மாவட்டம். (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)

3. அனைத்து அரசு நிதியுதவி பெறும் நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள், வேலூர் மாவட்டம்.
4. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம். (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)
5. அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் (பொ), வேலூர் மாவட்டம். (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)

**நகல்**

1. முதன்மைக் கல்வி அலுவலர், வேலூர் மாவட்டம்

அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பலாகிறது.